# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 56/2023

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05-ம் நாள் செவ்வாய்கிழமை வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW8 Examined as PW9

| | | |
|---|---|---|
| Date | : | 05.03.2024 |
| Name | : | சுந்தரம்பாள் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A1,A4,A5,A6,A7 Presnet. A3 absent. 317 petition filed and allowed.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

என்னுடைய பெயர் சுந்தரம்பாள். என் கணவர் பெயர் செல்வராஜ். நான் நல்லாடை கிராமத்தில் வசிக்கிறேன். நான்ஆடு, மாடு மேய்ப்பேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார்என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி ஆய்வாளர் முன்பாக அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)**

17.02.2018 தேதி மாலை 5.30 மணிக்கு நான் வீட்டில்இருந்தபோது நல்லாத்துறையில் வசிக்கும் ஜான்சான்தேவராயார் ரத்த காயங்களுடன் காப்பாத்துங்கள் காப்பாத்துங்கள் என்று கும்பிட்டுக்கொண்டு என்வீட்டின் கொள்ளைபுறம்வழியாக எங்கள் வீட்டிற்கு புகுந்து கதவை சாத்திக்கொண்டார். கொஞ்ச நேரத்தில்எங்கள் ஊரைச்சேர்ந்த கண்ணன் அவரது தம்பி ரவி கண்ணனின் அண்ணன் மகன் செந்தமிழ்செல்வன் ,செந்தமிழ்வாணன் மற்றும் விஸ்வநாதன், குணசேகரன் ஆகியோர் என்வீட்டிற்குள் வந்து காயம் பட்ட ஜான்சன்தேவராயர் வெளியில் இழுத்து சென்றார்கள் என்று போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.